ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1741 - 2012 ජනවාරි මස 13 වැනි සිකුරාදා - 2012.01.13
*1741 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கீழ் மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்ரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 26 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, சனவரி மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/21869
மாகாண காணி ஆணையாளரின்
இல. : 5/2/9/5/தீர்க.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

பதுளை மாவட்டம், பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திகனதென்ன 67 எச் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த திகனதென்ன எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் பி/பிஎன்டி/98/144 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் ஏ எனக் காட்டப் பட்டுள்ளதும் சுமார் 0.076 ஹெக்டேயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வதிவிடம் அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டுத் திரு. டபிள்யு. எம். ஏ. வீரகோன் என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத் தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : ஈ. எம். ஜயசேகர என்பவரின் காணி ;
கிழக்கு : ஓதுக்கம் ;
தெற்கு : டி. எல். ஹீன்மெனிகா என்பவரின் காணியின் எல்லை ;
மேற்கு : டி. பி. வீரகோன் என்பவரின் காணியின் எல்லை.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 1995 ஆம் வருடத்திற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும் ;

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மும்மடங்கு தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது ஐந்து வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப் படமாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும் ;

(ஒ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தப்படும் போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டு வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாதபோது நீண்ட காலக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படுவதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

குஷானி பொரலெஸ்ஸ,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இலக்கம் 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2011.12.14.

01-251

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.